**திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அ.வ.எண்: 176/2015**

**நீ.ம.சா.2**

**நாள்: 06.01.2023**

நீதிமன்ற சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியபாமா | | |
| கணவர் பெயர் | சண்முகம் | | |
| கிராமம் | செங்கல்பட்டு | தொழில் | ஆய்வாளர் நில அளவை துறை |
| வட்டம் | செங்கல்பட்டு | வயது | 48 ஆண்டுகள் |

**நீ.ம.சா.2: முதல் விசாரணை :**

1) 01.08.2017 அன்று நீதிமன்ற உத்தரவுப்படி ஒன்பத்துவேலி கிராம புல எண். 96/6J யை நீதிமன்ற ஆணையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் இருதரப்பினர் முன்னிலையில் நில அளவை செய்தேன் என்றால் சரிதான். ஆணையர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான்கெல்லையை நிர்ணயம் செய்து நில அளவை செய்தேன் என்றால் சரிதான். அதில் மேற்படி புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் இருந்தது என்றால் 20 செண்ட் இருந்தது.

2) மேற்படி புல எண்ணில் வருவாய் ஆவணங்களில் விஸ்தீரணம் எவ்வளவு இருந்தது என்றால் 0.02.5 ஏர்ஸ் (6 செண்ட்) இருந்தது. வாதி லூர்து ராஜ் அனுபவத்தில் தாவா புல எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் இருந்தது என்றால் 13 செண்ட். பிரதிவாதி அனுபவத்தில் எவ்வளவு விஸ்தீரணம் இருந்தது என்றால் 7 செண்ட். மேற்படி விஸ்தீரணங்களை அளந்து அறிக்கை கொடுத்துள்ளேனா என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) கமிஷ்ணர் வழங்கிய வாரண்ட்டை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். கமிஷ்ணர் வாரண்ட்டில் புல எண் 96/6J ல் விஸ்தீரணம் 0.14 2/3 செண்ட் என

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி அனுபவத்தில் 7 செண்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் வாதி பிரதிவாதிக்கு கிரையம் செய்த 5 செண்ட்டுடன் பிரதிவாதி 2 செண்ட் கூடுதலாக அனுபவித்து வந்தார் அதற்கு வருவாய் ஆவணங்களில் அல்லது வருவாய் துறையில் என்னவென்று குறிப்பிடுவீர்கள் என்றால் அனுபவம் என்று குறிப்பிடுவோம்.

2) பொதுவாக ஒரு நபருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தைவிட அந்த நபர் கூடுதலாக அனுபவம் செய்து வந்தால் அதற்கு ஆக்கிரமிப்பு என்று சொல்லப்படுமா அல்லது அனுபவம் என்று சொல்லப்படுமா என்றால் ஒதுக்கப்பட்ட இடமானது வருவாய் ஆவணங்களில் பதிவு செய்யப்படாததால் அதனை அனுபவம் என்று தான் குறிப்பிட முடியும். பிரதிவாதி மேற்படி 2 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்று சொன்னால் என்னால் மறுக்க முடியுமா என்றால் அரசு ஆவணங்களின்படி மறுக்க முடியும். நான் நிலஅளவை விதிகளின்படியும் வருவாய் துறை சட்டத்தின்படியும் சட்டத்திற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) மேற்படி 2 செண்ட் இடத்தை ஆவணங்களை பார்வையிட்டும் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதை தெரிந்து கொண்டே அதனை மறைப்பதற்காக ஆக்கிரமிப்பு என்ற வார்த்தையை தவிர்த்து அனுபவம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாரண்டில் கண்ட மொத்த விஸ்தீரணம் 20 செண்ட் என்பதை தவறுதலாக மேற்படி 96/6J மட்டும் உள்ளது என்று தவறாக அறிக்கை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.